1978 மார்ச் 3]

மூடப்பட்டுள்ள ஸ்டுடியோக்கள்.

* 372 வினு—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது தமிழ்நாட்டில் எத்தனை ஸ்டுடியோக்கள் மூடப்பட்டுள்ளன ?

(ஆ) அதனுல் எத்தனை பேர் வேலை இழந்துள்ளனர் ?

(இ) மூடிய ஸ்டுடியோக்களைத் திறப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மூன்று.

(ஆ) சுமார் 530 பேர்.

(இ) மூடிய ஸ்டுடியோக்களைத் திறக்க அரசினரிடம் நடவடிக்கை ஏதும் இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஸ்டுடியோக்களில் வேலை செய்த தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, வேலை இழந்திருக்கிருர்களே, அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, ஏன் இந்த ஸ்டுடியோக்கள் மூடப்பட்டன ? எதற்காக மூடியிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சரவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 3 ஸ்டுடியோக்களும் 1975-லேயே மூடப்பட்டுவிட்டன.

* 373 வினு— திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

கோல்டன் சினி ஸ்டுடியோ, கோல்டன் பிலிம் ஸ்டுடியோ ஆகிய நிறுவனங்கள் மூடப்பட்டதன் விளைவாக வேலையிழந்த தொழிலாளிகள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : கோல்டன சினி ஸ்டுடியோ மூடப்பட்டதால் வேலையிழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 200 ஆகும்.